# பொதுக்காலத்தின் 16 ஆம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு C

**இன்றைய வாசகங்கள்:**

தொடக்க நூலிலிருந்து வாசகம் 18:1-10,

திருப்பாடல்கள் 15:2-5,

திருத்தூதர் பவுல் கொலேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்: 12:4-28,

புனித லூக்காஸ் எழுதிய நற்செய்தியில் இருந்து வாசகம் 10:38-42

## திருப்பலி முன்னுரை:

சீரிய நல் உள்ளத்தோடு வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்து, மன உறுதியுடன் பலன் தருகிறவர்கள் பேறுபெற்றோர்.

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! நம் அவலங்களைப் போக்கும் நம் இறைவ னின் திருப்பெயரால் நல்வாழ்த்துக்கள் கூறி இத் திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு உங்களை அன்போடு வரவேற்கின்றோம். இன்று நாம் திருவழிபாட்டு ஆண்டின் பொதுக்காலம் பதினாறாம் ஞாயிறு தினத் திருப்பலியைக் கொண்டாடுகின்றோம். இறைவனை நம் இல்லத்தில் வரவேற்று உபசரிக்கவும், அவரது வார்த்தையை பணிவுடன் கேட்கவும் நம்மை தயாரிக்குமாறு இன்றைய திருவழிபாடு அழைப்பு விடுக்கிறது. நற்கருணை வடிவில் நம்மைத் தேடி வரும் ஆண்டவரை நாம் எத்தகைய தயாரிப்போடு வரவேற்கிறோம் என்பதை சிந்திக்க அழைக்கப்படுகிறோம். நோயிலும், பசியிலும் வாடுவோரில் தம்மைக் கண்டு, உபசரிக்க இறைவன் நம்மை அழைக்கிறார். அதே நேரத்தில், இறைவனின் வார்த்தைக்கு முழுமையாக செவிகொடுத்து, அவர் காட்டும் வழியில் நடக்க நாம் அழைக்கப்படுகிறோம். ஆண்டவர் இயேசு விரும்பும் நல்ல பாதையைத் தேர்ந்தெடுத்து வாழ வரம் வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**வாக்குறுதி தருபவராம் இறைவா,**

முற்காலத்தில் இறைவாக்கினர்கள் வழியாக நீர் செய்த அனைத்துவியத்தகுச் செயல்களை நினைவு கூர்ந்து திருஅவை, புதிய ஆற்றலோடு அனைத்து மாந்தருக்கும் உம் இறையரசை வழங்கிடத் தேவையான ஞானத்தை நிறைவாகப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**அன்பே உருவான ஆண்டவரே,**

விருந்தோம்பல் என்பது "முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழு மனத்தோடும் செய்யப்படும்" ஒரு செயல். இந்த நான்கில் ஒன்று தவறினாலும் விருந்தினர் முகம் சுளிக்க வாய்ப்புண்டு என்பதை உணர்ந்து எங்களை நாடி வரும் எங்கள் உறவினர்களையும், விருந்தினரையும் அன்புடனும், மகிழ்ச்சியுடன் நடத்திக் செல்லத் தேவையான பரந்த மனதினை அருளுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நல்வழி காட்டுபவராம் இறைவா,**

உமது இறைவார்த்தையை அறிவிக்கவும், கேட்கவும் தடையை ஏற்படுத்தும் அமைப்புகள் உலகிலிருந்து மறையவும், நற்செய்தி பணிக்கு இடறலாக செயல்படும் மனிதர்கள் மனந்திரும்பவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**அமைதி அளிப்பவராம் இறைவா,**

எம் இளையோர் இளமையில் உம்மை அதிகமாகத் தேடவும் இறையரசின் மதிப்பீடுகளைத் தனதாக்கி, தங்கள் வாழ்வால், கிறிஸ்துவுக்கும் சமூகத்திற்கும் சான்றுப் பகர்ந்திடத் தேவையான அருளைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**எல்லாம் வல்ல இறைவா!**

"நீ இன்று ஒருவருக்குக் கொடுக்கும் தண்ணீரை நாளை உனக்கு வேறொருவருக்குக் கொடுப்பார்" என்ற அனுபவமொழியினை மனதில் ஏற்று ஏழை,பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடுகளைக் களைந்துத் தேவையில் இருப்பவர்களுக்குப் பரந்த உள்ளத்தோடு தன்னலமற்ற சேவைப் புரியவும், இதையே இயேசுவின் சவாலாக ஏற்று வெற்றிப் பெற, சிறப்புடன் பணிப் புரிய உமது அருளைப் பொழியுமாறு இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**குடும்பங்களின் பாதுகாவலான எம் இறைவா!**

எம் குடும்பங்களில் உள்ள எம் பெற்றோர், பெரியோர், நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் சமாதானத்தோடும், ஒற்றுமையோடும் பிரிவினைகள் கருத்துவேறுபாடுகள் இல்லாமல் வாழத் தேவையான அருளைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**திட்டமிட்டு செயல்படுத்துபவராம் இறைவா,**

உம்மைப் போற்றுகிறோம். மார்த்தாவின் அறியாமையை அவருக்கு அன்புடன் சுட்டிக்காட்டியதுபோல, எங்களின் அறியாமையையும், குறை காணும் மனநிலையையும் சுட்டிக்காட்டியருளும். இதனால், நாங்கள் சரியானவைகளை உணரும் ஆற்றலை உமது தூய ஆவியால் பெற்றுக்கொள்ள வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**www.tamilcatholicnews.com**